

மைசூரில் நடைபெற்ற தேசிய அளவிலான சிலம்பம் போட்டியில் முதலிடம் பிடித்த மாணவர்கள் அகரம் மப்பேடு சி.டி.யுவராஜ் (14), வெங்கம்பாக்கம் எஸ்.சாய் சரத் (15), குரோம்பேட்டை ஜி.திஷாந்த் (12) ஆகியோர் நேற்று (21.8.2025) மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசனை சந்தித்து வாழ்த்து பெற்றனர். உடன் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், மகேஷ், பயிற்சியாளர் பெருமாள் ஆகியோர் உள்ளனர்.

# 3 நாட்கள் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்!

## “பேக்கரி பொருட்கள் தயாரித்தல் பயிற்சி”!

சென்னை,ஆக.22-

தமிழ்நாடு அரசின் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சென்னையில், 3 நாட்கள் தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டம் பேக்கரி பொருட்கள் தயாரித்தல் பயிற்சி வரும் 01.09.2025 முதல் 03.09.2025 தேதி வரை காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெற உள்ளது.

இப்பயிற்சியில் பேக்கரி பொருட்களின் மூலப்பொருள், பிராண்ட் போன்றவற்றின் கிடைக்கும் தன்மை, கருவிகள் மற்றும் உபகரணங்களின் உள்ளீடுகள், இயந்திரங்கள் முதலியன, ஹைதராபாத் கராச்சி பிஸ்கட், ஜெர்ரா உப்பு பிஸ்கட், இனிப்பு குக்கீகள், ஈஸ்ட் புளிக்கவைக்கப்பட்ட பாம்பே பன், இனிப்பு ரொட்டி, கிரீம் பன், பழ ரஸ்க், பப்ஸ் வகைகள் கேக் வகைகள் எப்படி தயாரிப்பது பற்றி இப்பயிற்சியில் விளக்குவார்கள். மேலும் தயாரிப்பு சந்தைப்படுத்துதலின் அம்சங்கள் பேக்கிங் லேபிளிங் மற்றும் அதற்காண விலை வழிமுறைகள் ஆகியன கற்றுத்தரப்படும், அரசு வழங்கும் உதவிகள் மற்றும் மானியங்கள் ஆகியவையும் விளக்கப்படும்.

இப்பயிற்சியில் ஆர்வமுள்ள தொழில்முனைவோர் (ஆண்/பெண்) 18 வயதுக்கு மேற்பட்ட குறைந்தபட்ச கல்வித் தகுதி 10வது வகுப்புடன் விண்ணப்பிக்கலாம். இப்பயிற்சியில் பங்குபெறும் பயனாளிகளுக்கு குறைந்த வாடகையில் குளிரூட்டப்பட்ட தங்கும் விடுதி உள்ளது தேவைப்படுவோர் இதற்கு விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளலாம்.

இப்பயிற்சி பற்றிய கூடுதல் விவரங்களை பெற விரும்புவோர் www.editn.in என்ற வலைத்தளத்தில் தெரிந்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு அலுவலக வேலை நாட்களில் (திங்கள் முதல் வெள்ளி வரை) காலை 10 மணி முதல் மாலை 5.45 மணி வரை தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி மற்றும் கைபேசி எண்கள்.

தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சிட்கோ தொழிற்பேட்டை, இடிஐஐ அலுவலக சாலை ஈக்காட்டுத்தாங்கல், சென்னை - 600 032. 8072914694 /8668102600.

முன்பதிவு அவசியம்:

அரசு சான்றிதழ் வழங்கப்படும்.



திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதி பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் நடைபெற்றது. உடன் மாநில மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், இரா.ஸ்ரீதரன், மு.பன்னீர்செல்வம், ப்ரியா விஜயரங்கன், ப.கார்த்திவேல்மாறன் ஆகியோர் உள்ளனர்.

# செஞ்சியில் அண்ணா அறிவகம் திறப்பு!

செஞ்சி, ஆக . 21 -

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் செஞ்சியில் அமைக்கப்பட்ட அண்ணா அறிவகத்தை விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ . திறந்து வைத்தார்.

தகவல் தொழில்நுட்ப அணிமாநில துணை செயலாளர் சுரேஷ் செல்வராஜ் தலைமை தாங்கினார்.

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் செஞ்சியில்அண்ணா அறிவகம் அமைக்கப்பட்டு அதன் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழுப்புரம் வடக்கு மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் ரோமியன் அனைவரையும் வரவேற்றார்

மாநில தகவல் தொழில் நுட்ப அணி துணை செயலாளர் சுரேஷ் செல்வராஜ் தலைமையில் செஞ்சி தேசூர் பாட்டை சாலையில் அமைக்கப்பட்டுள்ள புதிய அண்ணா அறிவகத்தை விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு திறந்து வைத்தார்.

நிகழ்ச்சியில்முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செந்தமிழ்ச்செல்வன், வல்லம் ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார், ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், விஜயராகவன், துரை, நகர செயலாளர் கார்த்திக்,மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை பொதுக்குழு உறுப்பினர்மணிவண்ணன், உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், அணி அமைப்பாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### மயிலை த.வேலு ஆலோசனை! நந்தனம் கி.மதி – கோ வி.லெனின் பங்கேற்பு!

# 121 அ வட்ட செயற்குழு நிர்வாகிகள் கூட்டம்!

## வட்டக் கழகச் செயலாளர் சீ. கிருஷ்ணமூர்த்தி அறிக்கை!

சென்னை, ஆக 22-

சென்னை தென் மேற்கு மாவட்டம் மயிலை மேற்கு பகுதி 121 அ வட்ட கழக நிர்வாகிகள் - வட்ட செயற்குழுக் கூட்டம் இன்று 22.8.2025 வெள்ளிக்கிழமை மாலை 7.00 மணியளவில் சாலை லாயிட்ஸ் சாலையில் அமைந்துள்ள, ரங்கா திருமண மண்டபத்தில், வட்டச் செயலாளர் சீ. கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெறுகிறது.

கழக தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்த்தற்கு நன்றி தெரிவித்தல் மற்றும் கழக ஆக்க பணிகள் குறித்து மாவட்ட கழக செயலாளர் மற்றும் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., மயிலை மேற்கு பகுதி செயலாளர் மற்றும் 121வது மாமன்ற உறுப்பினர் நந்தனம். கி.மதி எம்.சி., மயிலாப்பூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் மற்றும் தகவல் தொழில் நுட்ப அணி மாநில ஆலோசகர் கோ. வி. லெனின் ஆகியோர் பங்கேற்று ஆலோசனை வழங்குகின்றனர்.

இந்த கூட்டத்திற்கு ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கையை வெற்றிகரமாக உறுப்பினர் சேர்த்தற்கு வாழ்த்தும் மற்றும் ஆலோசனை வழங்கி கழக ஆக்க பணிகள் குறித்து ஆய்வு மேற்கொள்ள உள்ளனர்.

இக்கூட்டத்திற்கு 121 அ வட்ட கழகத்திற்கு உட்பட்ட, மாநில, மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பாக பொறுப்பாளர்கள் (BLA2) மற்றும் (BDA) பாக தகவல் தொழில்நுட்ப அணி மற்றும் பாக இளைஞர் அணி ஆகிய மூன்று நபர்களும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு வட்டச் செயலாளர் சீ. கிருஷ்ணமூர்த்தி கேட்டுக்கொண்டுள்ளார்.



தியாகராயர் நகர் 130 அ வட்ட கழக நிர்வாகிகள் பாக முகவர்கள் பி.டி.ஏ. ஆலோசனைக் கூட்டம் பகுதி கழக செயலாளர் கே.ஏழுமலை தலைமையில், வட்டச் செயலாளர் தட்சன் ஹரிஹரன் முன்னிலையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு, தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி, தொகுதி பார்வையாளர் திருமதி ரத்னா லோகேஸ்வரன் மற்றும் மாமன்ற உறுப்பினர் எஸ்.பாஸ்கர் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினர். இந்த நிகழ்ச்சியில் வட்ட கழக நிர்வாகிகள் , அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், பாக முகவர்கள் பாக டிஜிட்டல் ஏஜென்ட்கள் மகளிர் அணி சகோதரிகள் அனைவரும் விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# தி.மு.க. அயலக அணி

# மாவட்ட, மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## தி.மு.க. அயலக அணிச் செயலாளர் எம்.எம்.அப்துல்லா அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர்/ பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. அயலக அணியின் மாவட்ட மற்றும் மாநகரஅமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### திருப்பூர் வடக்கு மாவட்டம்

அமைப்பாளர் – இராம. முத்துராமன் 35, கொங்கு நகர், 4வது வீதி, திருப்பூர் – 641607.

துணை அமைப்பாளர்கள் – 1) எம். தனசேகரன் 2/257பி, சின்ன தோட்டம், சின்னஒட்டார்பாளையம், அவிநாசி – 638460, திருப்பூர் மாவட்டம். 2) து. ஹரி பிரசாத் 27, நேதாஜி வீதி, குமரானந்தபுரம், திருப்பூர் – 641602. 3) மு. தமிழ்ச்செல்வன் 415/1, சண்முகா நகர், 5வது வீதி, சாமுண்டிபுரம் மேற்கு, காந்தி நகர் அஞ்சல், திருப்பூர் – 641603. 4) நா. பாண்டியன் ஸ்ரீ அம்மன் மெடிக்கல், குருவாயூரப்பன் நகர், வாரணாசிபாளையம் பிரிவு, வாவிபாளையம், திருப்பூர் – 641666. 5) ரா. திருமூர்த்தி 1/368, ராஜா நகர், பிச்சம்பாளையம் புதூர், திருப்பூர் – 641603.

### கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம்

#### நாகர்கோவில் மாநகரம்

தலைவர் – மக்கீன் அப்துல்சமது 70, கச்சப்புறத் தெரு, இடலாக்குடி, கோட்டார், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.

துணைத் தலைவர் – அ.கோ. மகேஷ் 17/1, மீனாட்சி செட்டியார் தெரு, கோட்டார், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.

அமைப்பாளர் – தா. சுகின் 6/147, இசட்.சி. வின் நகர், களியங்காடு, நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் – 1) முனைவர் ரா. ஆனந்த் 195, சி.பி.எச். ரோடு, கிருஷ்ணன்கோவில், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம். 2) மை. முகம்மது அலி 122/2, இரண்டாம் தெரு, ராஜீவ் நகர், இருளப்பபுரம், கோட்டார், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம். 3) செ. விஷ்ணு 2சி, 11/ஏ, தளியபுரம் ஓட்டுபுரை தெரு, வடசேரி, நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம். 4) அஜிந்த் கேப்ரியல் ஜெலஸ்டின் 73பி2, கிறிஸ்து நகர், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.

### காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்

#### தாம்பரம் மாநகரம்

அமைப்பாளர் – துரை இரா. சிவகுமார் பிளாட் எண். , கதவு எண். 2, கஸ்தூரிபாய் தெரு, சிட்லபாக்கம், சென்னை – 600064.

துணை அமைப்பாளர்கள் – 1) எ.பி. பரதன் 5, ஐஸ்வர்யா நகர், 2வது தெரு 3வது குறுக்குத் தெரு, குரோம்பேட்டை, சென்னை – 600044. 2) வி.ஆர். சங்கர் 15, கரிகாலன் தெரு, துர்கா நகர், தாம்பரம் சானடோரியம், சென்னை – 600044. 3) ஜெயகாந்தன் 50, அயோத்தியம்மன் கோயில் தெரு, அனகாபுத்தூர், சென்னை – 600070. 4) முரளி 49, பவந்தியார் தெரு, செம்பாக்கம், சென்னை. 5) தா. முரளி 18/4, குறத்தியம்மன் கோயில் தெரு, படவேட்டம்மன் கோயில் அருகில், குமாரபுரம்,சென்னை – 600044. 6) இ. ஸ்டாலின் 4, மல்லிகா நகர், பி.வி. வைதியலிங்கம் ரோடு, பழைய பல்லாவரம், சென்னை – 600117.

### சேலம் மத்திய மாவட்டம்

சேலம் மத்திய மாவட்ட அயலக அணி அமைப்பாளராக நியமிக்கப்பட்ட சதீஸ்குமார் அருணாசலம் அவர்கள், தான் வகித்து வந்த பொறுப்பிலிருந்து விடுவித்துக் கொண்டதால், அவருக்குப் பதிலாக **ஆர். ராஜாகண்ணு**, (1/86-பி, குடித் தெரு, மேட்டுப்பட்டி &அஞ்சல், புளியம்பட்டி சேலம் மாவட்டம் – 636 455.) சேலம் மத்திய மாவட்ட அயலக அணி அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார். ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட துணை அமைப்பாளர்கள் இவருடன் இணைந்து பணியாற்றிட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 21-08-2025.

**எம்.எம்.அப்துல்லா**
செயலாளர்
தி.மு.க. அயலகஅணி.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## க.சொ. கணேசன்

## ஆகஸ்ட் 22 (2005)



பள்ளிப்பருவத்திலிருந்தே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு, ஜெயங்கொண்டம் பகுதியிலே கழகத்தை வளர்த்த முன்னோடிகளில் ஒருவர் இவர்.

1967ஆம் ஆண்டு உடையார்பாளையம் வட்டக் கழகச் செயலாளராகவும், ஒன்றிய சீரணித் தலைவராகவும், 25 ஆண்டுகள் தொடர்ந்து ஒன்றியக் கழகச் செயலாளராகவும், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் கழகப் பணியாற்றியவர்.

1964ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்பு போராட்டத்திலும், கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

1986ஆம் ஆண்டு தா.பழூர் ஒன்றியப் பெருந்தலைவராகவும், 1989 மற்றும் 1996 ஆகிய இருமுறை ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதி கழக உறுப்பினராகவும், பணியாற்றி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.


“களம் பல கண்டவனே, சிறை பல சென்றவனே, உளம் கவர் உரையாற்றிப் பேரவையில் வென்றவனே, குளம் என எமது கண்கள் நீர்நிறைய, கணப் பொழுதில் மறைய; மனம், ஏன் வந்ததோ ? எப்படித்தான் வந்ததோ–” என தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கல் கவிதையில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## மே.சு. சண்முகசுந்தரம்

## ஆகஸ்ட் 22 (2021)



இளமைப் பருவத்திலேய கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, கழகம் துவக்கப்பட்ட காலத்திலிருந்தே பணியாற்றி வந்தவர்.

1950ஆம் ஆண்டு தான் பிறந்த ஊரில் கிளைக் கழகத்தை உருவாக்கி, அக்கிளைச் செயலாளராகவும், மதுராந்தகம் வட்ட முதல் செயலாளராகவும், நகர நெசவாளர் அணியிலும், இலக்கிய அணியிலும் பொறுப்பு வகித்தவர்.

அய்யன் திருவள்ளுவர் அறக்கட்டளையை உருவாக்கி, அதன்மூலம் மாணவர்களுக்கு பரிசு வழங்குதல், மக்களுக்கான மருத்துவ முகாம் போன்றவற்றை நடத்தியவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**